
# அன்பே ! அன்பே !

(வள்ளலார் பாடல் விளக்கம்)



முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

# அன்பே! அன்பே!

(வள்ளலார் பாடல் விளக்கம்)

முதுமுனைவர்

இரா. இளங்குமரனார்

திருவள்ளுவர் நிலையம்

7, இராமன் தெரு, திருநகர்,

மதுரை - 625 006

# நூல் விளக்கம்

| | |
|---|---|
| நூற்பெயர் | அன்பே! அன்பே!<br>(வள்ளலார் பாடல் விளக்கம்) |
| ஆசிரியர் | இரா. இளங்குமரனார். |
| முதலாம் பதிப்பு | தி. பி. 2048 கி. பி. 2017 |
| உரிமை | ஆசிரியருக்கு |
| தாள் | 13. 7 வெள்ளைத் தாள் |
| அளவு | 1/8 |
| பக்கம் | vi + 26 = 32 |
| படிகள் | 500 |
| விலை | உருவா. 20/- |
| நூலாக்கம் | திபிரிண்டிங்கு அவுசு<br>திருச்சிராப்பள்ளி - 23.<br>0431 2420121 |
| வெளியீடு | திருவள்ளுவர் நிலையம்<br>7, இராமன் தெரு, திருநகர்,<br>மதுரை - 625 006. |

❖❖❖❖

# அன்பே! அன்பே!

## நூல்வரவு

தி.பி. 2045 மாசி 24 (08. 03. 2014) ஆம் நாள் மலையகத்துக்கு ஐந்தாம் முறையாகச் சென்றேன். ஒவ்வொரு முறையும் இணையராக வந்து கலந்துரையாடி, மகிழ்வதில் தவறாதவர் மருத்துவத் தோன்றல், அரசு மாமணி (தத்தோசீர்) புரவியப்பர் அவர்கள்! திருச்சிராப்பள்ளிசார் மண்ணின் மைந்தர்!

ஒவ்வொரு சந்திப்பிலும் நான் தவச்சாலைக்கு என்ன செய்ய வேண்டும் என்று வினாவுவார்; அவாவி நிற்பார். என் மறுமொழி, 'அன்பு செயவேண்டும்' என்பதாகவே இருந்தது. இம்முறை, அம்மையும் அப்பரும் ஒருங்கே நின்று என் பையில் ஒரு குறுநூல் வெளியிடும் அளவுக்குத் தொகை நல்கினர்.

யான் நினைந்து பார்த்தேன்! 'அன்பு செய வேண்டும்' என்ற என் மறுமொழியே மீண்டும் மீண்டும் ஒலித்தது.

வள்ளலார் பெருமான் பாடிய,

"அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே"

என்னும் பாடல் உந்தி எழுந்தது!

அப்பாடலின் 'அன்பு' விளக்கம் நெடிய நாள்களின் முன்னரே யான் எழுதியது நினைவில் நிற்க, அதனைத் தேடி எடுத்தேன்'.

"அன்பே அன்பே"

என்பது அதன் தலைப்பாக இருந்தது. அவ்வாறே அமைந்த குறுஞ்சுவடி இது.

இதனை என் கைப்படி கொண்டு கணினிப்படுத்திக் குறுவட்டும் ஆக்கித் தந்த அன்பின் அருமையர் முனைவர் **திருமகளார்** அவர்கள் ஆவர்.

வழக்கம் போல் தவச்சாலைப் பதிப்புகளை அமைவும் அழகும் கெழும அச்சிட்டுத்தரும் திருச்சிராப்பள்ளி அச்சுக்குழுமம் அச்சிட்டுத் தந்தது. அப்பொறுப்பை ஏற்றுச் செய்யும் பெருந்தகை முனைவர் பி. **தமிழகனார்!** ஆகியோர்க்கு நனிமிகு நன்றியுடையேன்.

வாழிய நலனே! வாழிய நிலனே!

இன்ப அன்புடன்,
**இரா. இளங்குமரன்.**

# "அன்பே! அன்பே!"

# அன்பியக்கமே உயிரியக்கம்

அன்பே உயிர்; அன்பியக்கமே உயிர் இயக்கம்.

அன்புச் சேர்க்கையால் அமைந்ததே உயிர்; அவ்வுயிர் அன்பின் இருக்கைக்கே உடலைத் தாங்கியது. அன்பிலா உடல், வறுங்கூடு!

உடலுக்கு ஒரு பெயர் கூடு! பறவை பூச்சி ஆயவைக்கும் கூடு உண்டு! ஒரு கூடு - உயிர்க் கூடு! பிறவியொடு வந்தது. மற்றொரு கூடு செயற்கைக் கூடு!

உயிரி அமைத்துக் கொண்டது அது!

உயிர்க்கூடு அன்பின்றி ஒழிந்தால், உயிர்க் கூடாக இல்லாமல் பார்வைக் கூட்டு அளவிலே நின்றுவிடும்.

அன்பின் வாழ்வே இறைமை வாழ்வு!

அன்புப் பணியே இறை வழிபாடு!

அன்பராவார் வீடு பேற்றாளர்!

ஆம்! அவர் தந்நலம் அற்றார்!

பொதுநலம் உற்றார்!

அன்புப்பணிக்கே பிறப்பினை வேண்டுவார்! அன்புப் பணிக்கு வீடுபேறு தடையாமென்று மீண்டும் மீண்டும் அன்புப் பணிக்குப் பிறப்பை வேண்டுவர்!

அன்புத் தொண்டே அவர்க்கு வீடுபேறு ஆகிய விழுப்பொருள் சீர்மை இது.

ஓரறிவு தொட்டுப் பேரறிவுப் பெருக்கம் வரை, படிமான அளவில் அன்பு வாழ்வேயாம். உலகியலில், உயிரியின் அன்பு வாழ்வே வரலாறு, காலை, தொண்டு, ஈகம் இன்னவை எல்லாம்!

அன்பைச் சொல்லா ஒரு படைப்பு இல்லை!

அன்பைச் சொல்லாப் படைப்பு உண்டானால் அது படைப்பு இல்லை!

மூல முதலே அன்பு! முழுதுறு விளையும் அன்பு! முடிநிலை அருளும் அன்பே! அன்பே!

அன்பைப் பாடியவர் - படம் பிடித்தவர் - பளிச்சிடச் செய்தவர், ஒருவரா? இருவரா? கோடி கோடிப் பேர்! ஆனால் அக்கோடிப் பேரும் அன்பின் ஒரு கோடியையும் காணாமையே கண்ட பொருள்! அன்பில் ஊறி, அருள் வடிவமாகவே நின்ற வள்ளலார்,

அன்பைப் படம்பிடிக்கிறார்! சொல்லோவியமாகத் தீட்டுகிறார்!

விரிய விரிய விரியும் அன்பை விளக்கத்தானா இயலும்!

ஓராற்றான் ஒரு பாடலுக்கு விளக்கமாகக் கிளர்ந்தது இச்சிறுசுவடி! தானன்றி, உலகையே தானாக்கிக் கொள்ளும் அன்புக்குத் தான் எத்தனை ஆற்றல்! அன்பே அன்பின் விளக்கம்!

அன்பராவோம் அன்புப் பொருளாக விளங்க!

இன்ப அன்புடன்,

**இரா. இளங்குமரன்.**

# நூல்

## ‘அன்பெனும் பிடியுள்’ என்னும் வள்ளலார் பாடல் விளக்கம்

### அன்பெனும் பிடி

ஒரு கைப் பிடிக்குள் எவ்வளவு தான் வைத்துக் கொள்ள முடியும். அதையும் பிறர் அறியாவண்ணம், வைத்துக் கொள்ள முடியும்?

கடிபாக்கு வைத்திருந்தாலும், காட்டிக் கொடுத்து விடுகிறதே, கைப்பிடி! கைப்பிடிக்குள் **கனமலை**யை அகப்படுத்தி விட முடியுமா? முடியும் என்றாரே வள்ளலார்!

**“அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே”**

‘பிடியில் இருந்து, பிடிப்பைப்’ படம் பிடித்துக் காட்டுகிறார் வள்ளலார். அப்பிடி, அன்பெனும் பிடி;

அப்பிடியுள் கையளவு மண்ணன்று;

கனமலையே அகப்படுகின்றது;

அகப்படுதல் என்பது புறப்படாது - புலப்படாது இருத்தல்!

ஊரை அழிக்கும் மதயானை, ஒரு பிடிக்குள் அகப்பட்டு விடுகின்றதா இல்லையா?

அழிவு எங்கே அழிந்தது?

அன்பிலே அழிந்தது?

பிடி பிடித்த பிடி - நல்ல பிடி! அது நல்லபடி ஆயிற்று.

அன்பெனும் பிடியுள் அகப்படுகிறதா இல்லையா மதமலை! இது காதல் பொருள்! வள்ளலார் கண்டது கடவுட் பொருள்!

காதல் பொருளே - கடவுட் பொருளே - கோவை! ஆம்; கோவை - தலைவனை - இறைவனைப் பாடிய நூல் தானே! அகமே இறையாய், மண்ணகத் திருந்து, விண்ணகத் துறையும் நிலை இது!

ஒரு செயலைச் செய்யும் போதே அச்செயலைக் கொண்டு மற்றொரு செயலையும் முடித்துக் கொள்ளல் வேண்டும் என்பதைத் திருவள்ளுவர்,

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையாகக் காட்டுகிறார். மதங்கொண்ட யானை காட்டுள் ஓடுகின்றது; ஓடித் தேடுகின்றது. ஒரு பிடியைப் பிடிக்கின்றது. பிடியும் தொடர மீள்கின்றது. அன்பெனும் பிடியுள் அகப்பட்டதா இல்லையா யானை! அம்மட்டோ ஒற்றை இரட்டையாய், மேலும் இனப்பெருக்கமாய்ச் சிறக்கவில்லையா!

"வினையால் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று"

என்பது அது.

## அன்புக்குடில்

குடிலுக்குள் எவன் இருப்பான்?
வறியன் இருப்பான் என உலகியல் கூறும்;
துறவன் இருப்பான் என மெய்யியல் கூறும்;
குடிலுக்குள் அரசன் இருப்பான் என்பார் வள்ளலார்!

வள்ளலார் வறியர்க்கு வறியர்; துறவர்க்குத் துறவர்; அவ்வவர்க்கு அவ்வவர்!

ஆதலால், அனைவர் காட்சியும் எட்டா இடத்திற்கு அவர் கருத்து ஏறும்; வீறும்! அன்பெனும் குடில்புகும் அரசு என்றார்! உலகியல் கண்டோர்க்கு மயக்கம்! தயக்கம்! உளவியல் கண்டோர்க்கு உண்மையுள் உண்மை!

மாடமளிகை - கூட கோபுரம்; எழுநிலை வளாகம்; நிலாமுற்றம்; தென்றல் மேடை; சாரல் முன்றில்; கொடிப்பந்தர்; ஆடுகளம்; மலர்ப் பொய்கை - இன்னன இன்னன மன்னவன் உடைமைகளாய் இருக்கக் குடில் புக என்ன வந்தது? துணியைக் கிழித்துக் கொண்டா இருக்கிறான்? (துணிவணிகர் பொறுத்துக் கொள்ள வேண்டும்; தையல் செய்வோரும் கூட) என வினவுவார். உளரானால், **கிழக்கே** நோக்க வேண்டுவதில்லை! ஏனெனில், 'பாரியின் பனிச்சுனை நீரும் ஓரூர் உண்மையில் ஒதுக்குவார் போல' ஒதுக்குவர்;

**மேல்** என்றால் மேல்' தானே என்பார்க்கும், இனிப்பாகுமே அது! முடிதுறந்த மன்னர் எட்டாம் எட்வர்ட்டு! ஏன் முடி துறந்தார்?

காதலியை மணமுடிக்க நினைத்தார்! அவர் காதலை முடிக்க நினைத்தது நாடு!

முடியை வேண்டா என முடித்து விட்டு, காதலியையே முடியாக்கிக் கொண்டார்! காதலுக்காக முடி துறந்த மன்னன் அவ்வெட்வர்ட்டு!

இரண்டு நின்றன அவர் முன்னே, "முடியா? காதலா?" என்பவை அவை! 'காதலே' என்றார் அவர்!

காதல் வென்ற வெற்றியா அது? ஆம், அவ்வெற்றிதான்; ஆனால், அதனொடும் ஒரு வெற்றியும் தொக்கிக் கிடந்தது; 'இன்னகுடிப் பிறந்தார்க்கே முடி என்பது அந்நாட்டுக் கண்மூடித்தனம். அதற்கு விழுந்ததோர் அடி!

அதுவே சீர்திருத்தம்! ஆதலால், 'முடியா? காதலா? சீர்திருத்தமா? என எழுதினார் தமிழ்க் காதல் கண்ட **தமிழ்த் தென்றல் திரு.வி.க.**

அரசு அன்பெனும் குடில்புகுந்ததா இல்லையா? வள்ளலார் வாக்கு, வையகத் தலைமணி வாக்கு!

அது, "அன்பெனும் குடிபுகும் அரசே என்பது! வாயிலகம் பார்த்து வாழத் தெரியாதான், கோயிலகம் பார்த்துத் தான் வாழ்ந்து விடுவானா?

"கூரையேறிக் கோழி பிடிக்கத் தெரியாத குருக்களா வானமேறி வைகுந்தம் காட்டுவார்?" என்று கேட்பாரில்லையா?

ஒப்புவமை கண்டா ஒன்றியது அன்பு! அன்பொப்பு இருந்தால் ஆயிரம் ஒப்பி நிற்குமே?

## வன்பு

அன்புப் பிடியுள் மலையும் அடங்கும்; அன்புக் குடிலுள் அரசும் புகும்; ஏன்?

வன்புப் பிடியுள் அடங்காதா? வன்புக் குகையுள் புகாதா? அடங்கவும் அடங்கும்! புகவும் புகும்! அவ்வன்பினுள் வன்பை உருவாக்கி வன்மை காட்டும்!

மீண்டும் ஒரு வன்பை ஒரு வன்பு ஒடுக்கி ஆளும்!

ஒன்று விழ, ஒன்று எழும்; ஒன்று எழ, ஒன்று விழும்! விழுதல் எழுதல் நொடி நொடியும் நடக்கும்! கொடியும் கோலும் மாறி மாறி எடுக்கும்!

அன்பை அன்பு வெல்லாதா? வெல்லுமா! வெல்லவேண்டுமே? அன்பு வெற்றி தானே அது!

அழிவுவெற்றி இல்லையே!

ஆக்கவெற்றி தானே அது!

அந்த வெற்றிக்காகத் தானே வாழ்வே உள்ளது!

வாழ்வு என்பது என்ன, நூற்றாண்டு வாழ்ந்தால் தானா?

வாழ்வு என்பது, செல்வத்தில் புரண்டால் தானா?

## அன்பு

ஒரே ஓர் உடை; ஆம் கணவன் மனைவி ஆகிய இருவருக்குமே ஓர் உடை; அதனை ஊடு கிழித்து ஒவ்வொரு பாதியை ஒருவர் உடுத்தும் வாழ்வு!

ஒருவர்க்கே உள்ள உணவு;

ஒருவர்க்கே பருக நீர்;

ஒருவர்க்கே இருக்க இடம்!

இருவர்க்கும் அவ்வோருணவு;

அவ்வொரு குடி;

அவ்வோரிடம்! கெட்டுப் போனதென்ன?

உள்ளம் இருவர்க்கும் கெட்டுப் போனால் தானே கேடு! இதனைத் தானே சங்கப் புலவர் 'வாழ்வு' என்று வாழ்த்துகிறார்.

**"ஒன்றன் கூறு ஆடைஉடுப்பவர் ஆயினும்**

**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"**

என்பது அவர்வாக்கு!

'ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை' என்றாரே, இரண்டினார் வாழ்வு வாழ்வாகுமா?

## ஒன்றுபடல்

ஒன்றும் ஒன்றும் அப்படி ஒன்றாகியதைக் கண்டு பாடினார் போலும் அவர்! எல்லா ஒன்றும் அப்படியே ஒன்றியா இருக்கும்! என்று நினைக்கத் தோன்றுகின்றதா?

பாறைக்கல், பாடுமா? பாடுகின்றதே! பாட வைக்கின்றானே! பாடும் தூண்கள் எத்தனை கோயில்களில் உள்ளன?

மாட்டின் நரம்பு - மீட்டுகிறதா இல்லையா இசை?

மண்பானை - பண்ணிசைக்கிறதா இல்லையா?

கும்பா நீர் - கொள்ளையிசை தரவில்லையா?

மழித்த தோல் - மண்டையை ஆட்டவைக்கிறதா இல்லையா?

துளைத்த குழல் - செவியுள் புகுந்து தென்றலாய்த் திகழவில்லையா?

இன்னும் என்னென்ன கருவிகள்? உயிரிலா - உணர்விலாக் கருவிகள்,
உணர்வான் உணர்வை எழுப்பி உணர்த்தக் கூடுமானால்,
உணர்த்தும் வகையால் உணர்த்தினால் உயிருடைய ஒருவர்
உணராது போகமுடியுமா? உணராக்குறை என்பதை ஒதுக்கி,
உணர்த்தாக் குறை என்பதை உணர்ந்தால் வேண்டும் பயன்
உண்டாகும் அல்லவா!

## மணம்

மணம் என்பது என்ன? மணத்தல் கலத்தல். நீரும் நீரும் கலந்தால் போல் பாலும் பாலும் கலந்தால் போல் நீரும் நிலமும் கலந்தால் போல் கலத்தல்!

மருவுதல் என்றாலும் கலத்தலே. அதன் வழி வந்ததே மருமகன் - மருமகள் - மருவீடு, மருகி, மருகர் என்பனவெல்லாம்.

மன்றல் என்பது என்ன?

மன்று ஆகிய 'அவை' அறிய அவனும், அவளும் இணைதல்; முன்னே மறைவு; பின்னே மன்று; முன்னே களவு; பின்னே கற்பு; அறையில் ஆடி அம்பலத்தாடல் பண்டை நெறி - இயல்நெறி; அம்பலத்தாடி, அறையில் ஆடல் இன்றை நெறி!

வாழ்க்கை ஒப்பந்தம் புது வழக்கு;

ஒப்பந்த வரவு, வெளிவரவு;

ஒளிவரவு தானா இவ்வெளி வரவு?

என்பதை வாழ்வியல் தான் தாழ்வியல் இன்றிக் காட்டவேண்டும். கலியாணம் பெருவருவாய்; ஆம்;

'கலியாணர்' என்பது கடல் வாணிகத்தால் கால்வழிகளெல்லாம் கால் கை வலியாமல் இருந்துண்ணத் தேடி வைத்த தேட்டாளர்!

பாட்டாளர்க்குக் கலியாணம் ஒட்டுமா? எட்டுமா? அதனால் தான் 'கலியாணம்' என்பதற்குக் கலியன் - சனியன் - வறுமையன் - நோய்முகன் - பற்றிக் கொள்ளுதல் என நிலைக்குத் தகப் பொருள் கண்டனர்.

கலியாண உயர் சொல்லை உரிமையிலாச் சொல்லாக்கி விட்டனர். "யாணுக் கவினாம்" என்பது தொல்காப்பியம். கலி மிகுதி. மிகுபேரழகும் மிகு பெரு நலமும் மிகு பெரு வாழ்வும் மிகு பேரின்பமும் ஒருங்கே அடைய உரிமையாக்கிய உயர்வு விழாக் 'கலியாணம்', 'உணர்விலார் வாய்ப்பட்டுத் தானும் கெட்டது!

கலியாணமும் தமிழே! மன்றலும் தமிழே! மணமும் தமிழே! கொடை விழாவைப் புரிந்த தந்தை தாயரின் தந்தைதாயர் தாமே கொடையோராய் நின்று 'தாதா' ஆகினர். 'தாதா' என்பது கொடைஞர் தாமே! அவர் தாமே தாத்தா!

## இருக்கை

ஒரு வண்டியில் செல்கிறோம்; ஒரு மணிப்பொழுதுச் செலவாக இருக்கலாம்; சிலமணிப் பொழுதுகளாகவும் இருக்கலாம்! ஒரு மணிப் பொழுதுக்கு உட்பட்ட செலவாகக் கூட இருக்கலாம்!

ஈரிருக்கை ஓரிருப்பு!

நம்மொடு ஒருவர்; அல்லது ஒருவரோடு நாம்;

பால் வேறுபாடு இல்லை!

அவ்வளவுக்கு நம் 'நாகரிகம்' இன்னும் வந்து விடவில்லை! ஒரு பால் தான் உடனிருப்பு! (நகரத்து வண்டியில் காணக் கூடாததும் அன்று!)

வரும்போதே தள்ளாடுதல்; அமரும் போதே சொக்கி விழுதல்; மூக்கைத் துளைக்கும் வியர்வை; பார்வையிலேயே அச்சம்; வாயைத் திறந்தால் வசையாயிரம்! என்ன செய்வது; உடனிருக்கிறார்; தாங்கும் மட்டும் பொறுக்கிறோம்; முடியாவிட்டால் நகர்ந்து வேறிடம் போகிறோம்; அவரைச் சொல்ல நமக்கென்ன உரிமை? அவரும் சீட்டைக் காட்டுவாரே!

இடம் இருந்தால் உட்காரலாம்; இல்லை, நிற்கலாம்; அடுத்தே இறங்கும் இடம் வந்தால் இறங்கி விடலாம்; வேறு வண்டி மாற வேண்டுமானாலும் இறங்கிக் கொள்ளலாம். நம் ஒருவர் விருப்பமே.

அவரென்ன கூட வருபவரா?

அவரென்ன கூடவே இருப்பவரா?

வண்டியை விட்டு இறங்கி விட்டால் ஏன்

அந்த இருப்பிடத்தை விட்டு எழுந்து விட்டால்

நமக்கும் அவருக்கும் என்ன தொடர்பு?

ஆனால், அவரோடு ஓரிருக்கையில்

இருப்பதற்கும் எவ்வளவு ஆய்வு?

எத்தனை சிந்தனை?

எத்தனை சிக்கல்?

கூட இருப்பவர், குடியிருப்பவரா?

வீட்டுள் இருப்பவரா?

கூட்டுள் இருப்பவரா?

'கொஞ்சம் பொழுது இருப்பவர், கொஞ்ச இருப்பவரா' கொண்டு கொடுக்க - பெற்றுப் பெருக - இருப்பவரா? இவரைப் பற்றியே இவ்வளவு எண்ணுகிறோமே!

காலமெல்லாம் உடனிருக்க வேண்டுபவரை - உளத்தில் உளமாய், உணர்வில் உணர்வாய், உயிரில் உயிராய் - இருக்க வேண்டுபவரை, வீட்டுள் இருப்பவரை அன்றிக் கூட்டுள்ளும் இருப்பவராய், இரண்டற்ற ஒருவராய் இன்ப துன்பத் துணையாய், மனைவியாய், தோழியாய், செவிலியாய், தாயாய், குருவாய், தெய்வமாய், எல்லாமாய் இருப்பவரை எப்படி எப்படியெல்லாம் எண்ணிப் பார்த்துத் தேர்ந்தெடுக்க வேண்டும்?

ஒருநாள் தங்கலுக்கு, ஒரு வேளை உணவுக்கு, ஒரு தரக் குடிப்புக்கு, ஓருடை மாற்றுக்கு, ஒரு பேச்சுக்கு, ஓர் ஆறுதலுக்கு, ஒரு துணைக்கு என்னென்ன ஆய்வு - இவ்வெல்லாமும் வாழ்நாளெல்லாம் தக்க வைத்துக் கொள்ளத்தக்க ஒருவரைத் தெரிந்தெடுக்க என்ன அக்கறை காட்டவேண்டும்? காட்டுகிறோமா?

## இருவரும் ஒருவர்

இருவர் ஒருவராக இயலுமா? அறியார் வினா இது! அன்பின் இயல் அறியார் வினா இது? மகவுக்காகத் தாய், கணவனுக்காக மனைவி, தலைவனுக்காகத் தொண்டன், தோழனுக்காகத் தோழன் **முடிந்த செய்தி,**

**முடிந்த செய்தியா?** தொடரும் செய்தியா? எத்தனை காதலர் இணைந்தே விட்டனர் - தீயிலே - நீரிலே - தூக்கிலே - மருந்திலே - மலையிலே! அவர் ஒருவரா இருவரா?

இருதலை ஒரு புறா; குடல் ஒன்று; எத்தலை உண்ணினும் அவ்வொரு குடல் சேரும்; அண்ணனும் தம்பியும் அப்படி இருதலைப் புறாவென இருப்பதைக் குறிக்கிறது. **தகடூர்ச் செலவு!**

காதல் இலக்கியம் அதனைக் காதலர்க்குக் காட்டுகிறது. உள்ளொத்த அன்பு உண்டாகி விட்டால் இரண்டு ஒன்றாதல் புதுவதா? உள்ளொத்த அன்பு உண்டாகாவிட்டால் ஒன்றே இரண்டாதல் இல்லையா! அதுதானே உள்ளொன்று வைத்துப் புறத்தொன்று வாழல்!

## ஒருமையும் உலகும்

சிலம்புக் கவுந்தி, 'கோவல கண்ணகி'யரை என் மக்கள் என்றார். கோவல கண்ணகியர் கணவன் மனைவியர் என்பது ஏடறி செய்தி மட்டுமன்று; நாடறி செய்தி. அவள் மகளானால், அவன் மருகன். அவன் மகனானால் அவள் மருகி! அது தானே **உறவியல்!** ஆனால், **அருளியல்** ஆமா அது? அருள் வளர் துறவியல் ஆமா அது?

'மருமகன்' என்றால், 'மாமி' உடன் வருவாளா? மருகியானால் 'பிணக்கிலா இணக்கம் இயையுமா?

இருவரும் மக்கள் என்னில் 'இரு கன்றினுக்கு இரங்கும் தாய்! கவுந்தியன்னை!

நேய ஆசிரியன் தன்னிடம் பயிலுவார்க்குத் தந்தை. அவன் 'என்னிடம் பயில்வார் என்மக்கள்; ஆடவர் ஆயினென்? மகளிர் ஆயினென்; ஆசிரியப் பெருநிலை அன்னது என்கிறான். அன்னதை அறியா மடவன், இத்தனை பிள்ளைகளா உமக்கு; நல்ல ஆள்' என்றால் அவன் கீழ்பாக்கத்தவனா? மேல்பாக்கத்தவனா?

'கூடப் பிறந்தவர் இப்படியா கூடியிருப்பர்? என்று நரித்தனம் செய்தனர் என்பதால் தானே, காவுந்தி வாக்கால், 'முள்ளுடைக் காட்டில் முதுநரியாகிக் கூவிளி கொண்டு போவழிப் போயினர்' என்று புனைந்தார் இளங்கோவடிகளார்! நரிகளாக வாழும், **'நெஞ்சக் கலப்பிலா வஞ்சக்கலப்பை'** இனங்காட்டிய இளங்கோ அவர்.

“சுடுசோறுண்ணேன்; உண்ணின், உள்ளே உறையும் அவரைச் சுடும்” என வள்ளுவத் தலைவி கூறுதல், ஈருடல் ஓருயிர் வாழ்வேயாம்! “தன்னை மறந்தாள்; தன் பெயர் கெட்டாள்; தலைப் பட்டாள் நங்கை, தலைவன் தாளே’’ என்னும் நாவரசர் நங்கை இருமையும் ஒருமையாய பெருமையளேயாம்!

முந்தையோர் கண்ட ‘சங்கப்பலகை’ என்பதென்ன? தகவாளர் வரவரத் தானே இடங்கொடுக்கும் சங்கப்பலகை என்றது ‘நெஞ்சப்பலகை’ தானே! அது தானே, தக்கார்க்கெல்லாம் தடையின்றி இடந்தரும் தங்கப்பலகை!

என் நெஞ்சப்பலகையில் ‘நானே’ ஏறி அமர்ந்து கொண்டால், எவர்க்கேனும் இருக்க இடம் தருவேனா? ஒன்றி நிற்கவேனும் இடம் தருவேனா? நான் அங்கு இல்லாமல் தக்காரையெல்லாம் ஏற்று அமர்த்துவேனானால் ஒருவர் என்ன, இருவர் என்ன, உலகையே அமர்த்தி விடலாமே! அவ்வாறிருக்க ஒருவன் ஒருத்தியைத் தானா இருத்திக் கொள்ளமுடியாது.

அன்னை தெரேசா மணந்தவரா? மக்களைப் பெற்றவரா? உலக மக்கள் எல்லோரும் அவர் மக்கள் என்னத் தடையென்ன? **உள்ளுகை அளவு உள்ளத்திலே உலகமே அடங்கியிருக்க வில்லையா?**

வாடிய பயிரைக் கண்டு வாடியவர் வள்ளலார்! வாடிய பயிர்க்காக வாடியவரைக் கண்டு, வாடிய பயிர் வாடுதல் நீங்க வான் மழை உதவுதல் வாடிக்கையாகி விடாதா? உருகி உருகி நின்றால், உருக்கையும் உருக்கிவிடாதா என்ன? வாழும் உயிர்க்காக வாழும் உள்ளம் வருந்தி நிற்க வையகம் தாங்காது என்பது தானே குறிப்பு!

ஒருவர் உருக்கம் உலகை உருக்கும் போது,
உயிர்களை எல்லாம் உருக்கும்போது,
ஒருவர் ஒருவரை - ஒன்றி உடனாய் உறையும்
ஒருவர் ஒருவரை -
உருக்கிவிட முடியாதா?
முடியவில்லையானால் புறம் நோக்கி என்ன?
உள் நோக்கியன்றோ பார்க்கவேண்டும்!
உள் நோக்கம் என்ன?
உள்ளகத்தே ஆம் -
அன்பு நோக்கம்.

# ஓர் உருண்டை

தலைவன் தலைவியரை 'ஈருடல் ஓருயிர்' என்றது சங்கப்பாடல். ஓர் உயிரை இரண்டாகப் பகுத்து வைத்தது போன்றவர் என்றும் கூறியது. உடம்பும் உயிரும் என்று கூறியதும் உண்டு. நிலமும் நீரும் கலந்தது போன்ற நேயமிக்க நெஞ்சக் கலப்பினர் என்றதும் உண்டு.

இதோ ஓர் அரிய காட்சி! எளியதாக எங்கும் காணும் காட்சிதான்! ஆனால், நோக்குவார் நோக்குப் போல் அல்லவோ காட்சி விளக்கம் பெறுகின்றது. முன்னே சொல்லிய காட்சிகளை எல்லாம் கண்ணேரில் கண்டு கொள்ள வாய்ந்த காட்சி அது.

பெரும்பாரம் ஏற்றி இழுக்க முடியாமல் இழுக்கும் வண்டி போல நகர்கிறது ஒரு நத்தை. அதற்கு எதிராக அதனைப் போலவே நகரும் இன்னொரு நத்தை. இரண்டற்கும் உரிய இடைவெளி, ஓரடித் தொலைவே. ஆனால் அவை நகரும் மெல்லிய நகர்விலே ஓர் அரைமணிப் பொழுது ஆயிற்று! நத்தைகள் இரண்டும் எப்படி, ஒன்றாகிக்கூடி - அரையும் அரையும் கூடிய - கோலியுருண்டை போலக் கூடிக் கொண்டன! உயிர் பகுத்து வைத்திருந்த உரிமை இயற்கை இன்பியல் ஒன்றாகிச் செறிந்துவிட்டன! ஒன்றொடு ஒன்று என்பதா? ஒன்றும் ஒன்றும் என்பதா? ஒன்றாகி விட்ட ஒன்று என்பதா? இது அன்புச் செறிவா? உயிரின் ஒன்றுதலா? காதல் உலகக் கவினை உலகம் கண்டு கொள்ளச் செய்த கவின் பிறப்பா? கடவுட் காதல் என்பதா? அல்லது வள்ளலார் கூறியவாறு,

'புணர்ந்து கலந்து ஒன்றாகிப் பொருந்திய பொருந்துதலா? இல்லை வீடு பேறு தான் இக்கூடு பேறா? அன்பு என்னதான் செய்யாது? அன்பரே காணவல்லார்!

இறையாம் அரசு அன்பெனும் குடிலுள் புகுதலை,

**"நானிருக்கும் குடிசையிலே வலிந்துநுழைந் தெனக்கே**
**நல்லதிரு அருளமுதம் நல்கியதன் றியும்என்**
**ஊனிருக்கும் குடிசையிலும் உவந்துநுழைந் தடியேன்**
**உள்ளமெனும் சிறுகுடிசை யுள்ளும்நுழைந் தனையே"**

என வள்ளலார் கூறியதைக் கருதுக (3984). இப்பதிகம் முழுமையும், 'என்னுளமாம் குடிசை நுழைந்தனையே' என்றார். என்னுளம் என்பது என்ன? 'அன்புளம்' என்பதே அது. அதனையும் விளக்கமாக 'அன்பெனும் குடிசை' என்கிறார் (3994).

# அன்பு வலை

கையால் பிடிக்க இயலாததைக் கரவால் பிடிக்க வழி செய்வது வலை. மீனைத் தூண்டில் போட்டுப் பிடிப்பார். அவர் ஒன்று ஒன்றாகத் தேடிப் பிடிப்பவர். கூட்டமாக மீனைப் பிடிப்பார் வலையோடு திரிவர்; வலை இழுக்கும் பகுதிக்கு மீன்களை வரச் செய்து மீன்கள் வந்ததும் வலையைச் சுருட்டிக் கொண்டு கரைக்கு வந்து கூடை கூடையாக அள்ளிக் கொள்வர். கட்டுமரமேறியும் படகேறியும் பருமீன்களைக் கொணர்வர். பறவைகளைப் பிடிக்க வலையும் உண்டு. கண்ணியும் உண்டு! அப்பறவையைப் பிடிக்கத் தேர்ந்தவன் புள்ளுவனாம். அவன் தன் ஒலியாலே பறவையை அருகே வரச் செய்து பற்றிக் கொள்வனாம்.

தன்னுரிமையில்லா ஒன்றை, தனக்குத் தேவையாம் ஒன்றைப் பற்றிக் கொள்ள வாய்ந்த கருவி வலை. இனி, கண்ணே வலையாகக் கொண்டு கவர்வதும், வஞ்சமே வலையாகக் கவர்வதும் நாடறி செய்தி. கொசுவலை போன்றவை உள்ளே தீமை வராது தடுப்பவை. சல்லடைவலை பன்னாடை நெய்யரி என்பவை ஆவதை விட்டு ஆகாததைப் பற்றி கொள்ள வாய்ந்தவை. இவையெல்லாம் அன்பு வலையா என்னின் இல்லை என்பது தானே விளங்கும். கொலைவலை, பயன்வலை, காப்புவலை என்னும் வகையவை இவை.

அன்பு வலையும் பற்றிப் பிடிக்கும் வலைதான். ஆனால் கண்வலை, வஞ்ச நெஞ்சவலை, கவர்வலை, தடுப்பு வலை, வடிப்புவலை போன்றவை அன்று. அவ்வலைகள் எல்லாம் பருப்பொருள் பற்றிய வலைகள்! அன்பு வலையோ நுண்பொருளாம். பரம்பொருளைப் பற்றிக் கொள்ளும் வலை.

ஓட்டை வலையால் உருவில்லாப் பொருளைப் பற்றிக் கொள்ளமுடியுமா? முடியும் என மேதக்க மெய்யுணர்வாளர் காலம் காலமாகச் சொல்லி வைத்த அழியாச் சான்றுகள் ஒன்றா இரண்டா? ஆயிரம் ஆயிரம்!

"ஓட்டை வலையால் உருவில்லா ஒன்றை அகப்படுத்தல் என்பது என்றால், கேட்பவனுக்கு அறிவு இல்லையா? என்பது பழமொழி அல்லவா" எனத் தோன்றுகிறதா?

எறிந்தும் உதைத்தும் விளையாடும் பந்து! மிதி வண்டிச் சக்கரம் முதல் பேருந்து சரக்குந்து என்னும் ஊர்திகளின் சக்கரங்கள்! இவற்றுள் உள்ளே உள்ளது என்ன?

உள்ளே உள்ளது காற்று!

ஓர் ஓட்டை, அக்காற்றுப் பையில் விழட்டுமே! உள்ளே இருக்கும் காற்று இருக்குமா? வண்டி ஓடுமா?

நம் கூட்டுள் இருப்பதும் காற்றுத் தானே! ஓரோட்டையா, ஈரோட்டைகளா? கண்ணுக்குத் தெரிய மட்டும் ஒன்பது ஓட்டைகள்! காற்று வருகிறது, போகிறது, சுழல்கிறது, தங்குகிறது; எப்படி முடிகிறது!

உயிர்களின் உடலில் ஓட்டைகள் பல இருந்தாலும் உயிர்க்காற்று ஓடாமல், அதற்குப் போய்விட என உள்ளகாலம் வரை போகாமல் நிற்பது வியப்பு இல்லையா? ஓட்டைக் குடத்தில் நீர் தங்காது! இவ்வோட்டைக் குடமாம் உயிர்களின் உடலில், நீரும் தங்குகின்றதே! நம் உணர்வால் நிறுத்தி உரிய இடத்தில் பொழுதில் கழிக்க முடிகின்றதே!

"காயமே பொய்யடா! காற்றடைத்த பையடா!"

எனப் பாடலாம்! மற்றைக் காற்றடைத்த பை போல நம் காயம் (உடல்) இருந்தால் இப்பாட்டைப் பாட இயலுமா?

ஓட்டை இருந்தும் காற்று ஓடிவிடாமல் தங்குவது போல, உருவம் இல்லா மெய்ப்பொருளும் உயிரோடு உயிராக இருந்து வருவதைக் கண் கூடாக உணர்ந்து அன்பு வலையர் ஆயிரம் ஆயிரமாகப் பாடியுள்ளனர்.

"தானே வந்து என் உள்ளம் புகுந்து" என்பது என்ன?

"கொண்டது என்தன்னை கொடுத்தது நின்தன்னை" என்பது என்ன?

"உள்ளம் கவர்கள்வன்" என்பது என்ன?

"என்னுளம் நிற்றி நீ" என்பது என்ன?

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட அத்தன்" என்பது என்ன?

"அன்பே சிவமாய், அமர்ந்திருந்தாரே" என்பது என்ன?

"உரிமையால் யானும் நீயும் ஒன்றெனக் கலந்து" என்பது என்ன?

"என்புடை நீ இருக்கின்றாய் உன்புடை நான் மகிழ்ந்தே இருக்கின்றேன் இவ்வொருமை யார்பெறுவார் ஈண்டே" என்பதென்ன?

இவையெல்லாம் அன்பு வலையுள் பரம்பொருள் தானே வந்து புகுந்து கொண்ட மாட்சிமைப் பேறு அல்லவா!

வஞ்சவலைக்குள் வீழ்ந்தோர் அவலங்களை எழுதி முடியுமா?

கொலை வலைக்குள் புகுந்தவற்றின் அலைநிலையை ஆரால் எழுதமுடியும்?

அவ்வலைகளின் அலைவும் உலைவும் அன்பு வலைப்பட்ட பரம்பொருட்கு உண்டா?

இன்னொரு வியப்பு, அன்பு வலைக்கு.

நெய்யரி, பன்னாடை, சல்லடை என்பவை வலைகள் தாமே! இவற்றின் மேலே தங்குபவை எவை? கீழே வழிபவை எவை?

சக்கை - சாரமற்றது - தள்ளுபடியானது மேலே தங்கும்! சாரமுடையது. தேவையானது. நுண்ணியது கீழே வழியும் அல்லவோ!

வேண்டாததைப் பற்றிப் பிடிக்கும் வலைதானே வேண்டியதை வழிய விடுகின்றது! ஆனால் அன்பு வலையுள் அகப்படும் பரம்பொருள் 'மாசிலாப் பொருள்' ஆதலால் படிப்பு வேண்டா; பிடிப்பு வேண்டா; தள்ளுதல் வேண்டா! அன்பு வலையுள் தானே புகுவதற்குக் கொள்ளுதல் முயற்சிதானும் வேண்டுவது இல்லையே!

வலையுள் அகப்பட்ட உயிர்கள், தப்பா. அல்லல் அடைந்தே தீரும். ஆனால் அன்பு வலையுள் அகப்பட்ட பரம்பொருள் தானே விரும்பிப் புகுந்தது; தானே விரும்பி உறைவது. ஓயா, ஒழியா இன்பத்துள் உயிரை ஆழ்த்த வந்த அப்பரம்பொருள் அல்லலுக்கு ஆளாகுமா? அன்புவலை ஆளாக்குமா? அதன் அருளாணையின் வெளிப்பாடு தானே,

"அன்பர் பணிசெய்ய ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" என்பது,

"இன்பமே யன்றித் துன்ப மில்லை' என்னும் பரம்பொருள்,

"அல்லல் அருளாள்வார்க்கு இல்லை" என்பதைக் காட்டிய பரம்பொருள்.

அல்லலோ அலக்கணோ படவோ செய்யும்? ஆதலால் வலையாலும் துயரில்லை!

வலைவிரிப்பானாலும் துயரில்லை! வலையையும் வலையுடையானையும் அருளிக் காக்கும் பரம்பொருளுக்கு எங்ஙனம் அல்லலாம்!

பரம்பொருளாவது அப்பாலுக்கு அப்பாலாம் பொருள். அன்பினால் இப்பாலுக்கு இப்பாலாய் அகப்படுகின்றது. அன்பெனும் வலையுள் அகப்படும் பரம்பொருள் சீர்மை இஃதாம்.

## அன்பெனும் கரம் (கை)

அன்பே இறை; அன்பே உயிர்நிலை;

அன்பே உயிரியக்கம்;

அன்புற்ற வாழ்வே இன்புற்ற வாழ்வு;

இவ்வன்பு, கை என்னும் உறுப்பு நிலை உறுமா?

உறுப்பு என்றால் உயர்வானது இல்லையா? உறுப்பின் அமைப்புத் தானே உயிர் நிலையாம் உடல்.

கண் உறுப்புத் தானே!

அதனைப் பெற்ற பேறு என்ன!

கண்ணின் மணியின் சிறப்பு என்ன?

ஒன்றில் ஒன்று பெருகிப் பெருகி விளக்கமுறவில்லையா!

இனி அகக்கண் பெருமைக்கு அளவுண்டா?

கை என்ன எளிய உறுப்பா?

'கையால் ஆகாதவன் - பழிப்பு', கையறுதல் செயலற்றுப் போதல் எனப்படுமே!

கை என்பது ஒழுக்கப் பொருளது; ஆதலால் தானே 'கைகோள்' என அக ஒழுக்கப் பெயராயிற்று!

உழவர்க்கு ஒரு பெயர், கை செய்து ஊண் மாலையவர்' என்பது. கையால் செய்து அவ்வுழைப்பால் வந்த வருவாய் கொண்டு உலகு வாழத் தாமும் வாழும் கையல்லவோ உழவர் கை. உழவர் கை மடங்கி விட்டால் எவர் கை தாம் நீளும். ஆசையற்ற துறவியரும் உழவர் கைந்நலம் பார்த்தலவோ வாழ்வர்!

உழவர், எவரிடமும் எதனையும் இரவார்;

இரப்பவர்க்கு இல்லை என மாட்டார்;

கரவு என்பதை அறியார்;

அவர் மட்டுமல்லர்;

அவர் பிறவிப் பேறும், அப்பிறப்புப் பேறு கொண்டாரின் பெருமிதப் பேறும் அவை; ஆதலால் அவர் கை (உழுங்கை) உலகோர் தொழுங்கையாம்! அக் கையின் தெய்வ இயல் கொண்டு கம்பர் 'திருக்கை' என்று ஒரு சிறு நூல் படைத்தார். அதன் பெயர் திருக்கை வழக்கம். ஏரெழுபது என்னும் நூலும் கம்பர் பாடிய உழவர் புகழ் நூலேயாம்!

கைத்தொழில் எனப்படாதவை எவை?

கைத்தொழில் கொண்டல்லவோ உலக வளமும் நலமும் அரசின் செம்மையும் மக்கள் வாழ்வும் இயல்கின்றன.

'கை பார்த்தல்' என்பது குறி பார்த்தலா? எதிர் பார்த்தல் இல்லையா? ஏன், கொடை வழங்குவது கை தானே!

பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ பாரில்
அறங்கள் வளரு மம்மா''

என்று கவிமணி பாடினாரே, 'கைந்நலம்' தானே.

பொருள் என்பதே, 'கைப்பொருள்' எனப்படலால் தானே, 'கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி' எனப்பட்டது.

ஆபுத்திரன் கைப்பொருள் எது?

மணிமேகலையார் கைப்பொருள் எது?

அமுதசுரபி அல்லவோ! வாரி வாரி அமுது வழங்கிய ஆபுத்திரன் அமுதசுரபி, பிச்சையூண் பெறுவார் இல்லாமையால், தம் ஊணுக்காகப் பயன்படுத்தலாகாது என்னும் உயிர் நோக்கால் கைவிடப்பட்டதாகவும், அவ் வமுதசுரபியே மணிமேகலையார் கைக்கு எய்த அவர், காணார், கேளார், கால் முடமாயோர், பேணா மாந்தர், பிணி நோய் உற்றோர், யாவரும் வருக! **"ஆபுத்திரன் தன் கை அமுதசுரபி"** எனக் கூவிக் கூவி அழைத்து அமுதூட்டி ஆருயிர் தளிர்க்கச் செய்தார் அல்லவோ!

ஆபுத்திரன் கை அமுதசுரபி என்ற அருமை எளிமையில் வருவதா! வழங்கும் மணிமேகலையார் தம் புகழ் விரும்பாராய் ஆபுத்திரன் கையிற்கே உரிய புகழை அடைவித்தார் அல்லரோ?

ஒவ்வொருவர் கையும் அமுதசுரபி யாகட்டும்;

கண்ணும் செவியும் காலும் உடலும் அமுதசுரபி யாகட்டும்; எண்ணமும் சொல்லும் செயலும் அமுதசுரபி யாகட்டும் என்பது தானே! இவையெல்லாம் அன்பெனும் கரத்தமர் அமிழ்தின் விரிவாக்கம் என்பதை உணர்த்தவில்லையா!

அன்பெனும் பிடியுள் அகப்படும் **மலை**

அன்பெனும் குடில்புகும் **அரசு**

அன்பெனும் வலைக்குட்படு பரம்**பொருள்**

அன்பெனும் கரத்தமர் **அமுது**

என்பவை மட்டும் தாமா இறைமை?

## அன்பு, கடம் (குடம்)

பிடியும் குடிலும் வலையும் கையும் ஆகிய அது, குடமாகவும் விளங்குகின்றது. அன்பாம் குடம், மண்ணால் வனையப் பட்டதா? பொன்னால் செய்யப்பட்டதா? எதனால் ஆனால் என்ன? ஆனால் குடிசைக்குள் பொற்குடம், வெள்ளிக்குடம் முதலிய விலையுயர் குடங்களா இருக்கக் கூடும். இக்குடம், மட்குடமே! மட்குடம் பெரிதா சிறிதா?

எவ்வளவு பெரிதானாலும் கலம் வனையப் பயன்படுத்தும் சக்கரத்தினும் பெரிதாக இருந்து விட முடியாதே! கடம் என்பது தாழி, மிடா எனப் பெரிதுபட்டு விடாதே. கையுள் பகுதிக்குக் குடங்கை என்பது பெயர். இடுப்பில் வைக்கப்பட்ட குடம் கையால் வளைத்துப் பற்றப்படுகிறது அல்லவா! அதுவே குடங்கை!

"குடங்கை நீரும் பச்சிலையும்" என்பது திருவிளையாடல் தொடர்.

வைக்கோல், புல் முதலியவற்றை அள்ளிக் கைக்கும் இடுப்புக்கும் இடையே வைத்துச் செல்வதைக் குடங்கை (கொடங்கை) என்பது தென்தமிழக வழக்கு. குழந்தைகள் தூக்கும் குடம் சிறிதாக வனையப்படும். ஆனால், தொங்கவிட்டுச் செல்லும் தோண்டி அளவினும் பெரிதாக இருக்கும் குடம்.

இசைக்கருவிகளுள் ஒன்று கடம்! 'அது குடம் தானே! யாழ் உறுப்புகளுள் ஒன்றும், கட்டைவண்டி உறுப்புகளுள் ஒன்றும் குடம் ஆகும்.

குடத்தால் அளத்தல், முகத்தல் அளவையுள் ஒன்று. எண்ணெய், நெய் முதலியவற்றை அளந்து விற்றல் பழந்தமிழர் வணிகமுறையாக இருந்தது. தூதை, பானை, குடம், கலயம், சிட்டி என்பனவெல்லாம்

முகத்தலளவைக் கருவிப் பெயர்கள். அன்புக்குடம் அளவுட் பட்ட குடமாக இருக்குமா?

அன்புக்குடம் அளக்க முடியா அகலம் உடையது; அளக்க முடியா உயரம் உடையது. அளவைக்கு உட்படா அதனை எப்படி உவமையால் விளக்கமுடியும்?

'நிலத்தினும் பெரிது
நீரினும் ஆழமானது
வானினும் உயர்ந்தது"

என்பது சங்கப்பாடல்.

**"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆரளவு இன்றே"**

என்பது அது. (குறுந்தொகை).

அன்புக்குடத்துள், பெரும்பெருங்கடலும் அடங்கி விடுமாம்!

கடல் என்பதன் பொருள் என்ன?

கண்ணின் பார்வை அளவுள் அடங்காமல் கடந்து நீண்டு விரிந்து பரவிக் கிடப்பது எதுவோ அதுவே கடல்! இத்தகைய கடலா கடத்துள் அடங்கிவிடும்! ஆம்; அடங்கி விடும் என்பது மெய்யே!

ஒரு புல்; புல்லின் நுனியில் பனிநீர்; அளவோ சிறிய தவசமாம் தினையினும் சிறியது. அப்புல்லின் முன்னே ஒரு பனை! நெடிதுயர்ந்து நேராக விளங்கும் பனை; மடலும் பாளையும் ஓலையும் குருத்தும் உடையது. அப் பனை, புல்நுனிப் பனிநீரில் அடங்கி விடுகிறது இல்லையா!

பொதியமே ஆகட்டும்! இமயமே ஆகட்டும்! பிற மலைகள் ஆகட்டும்! எம்மலை ஆயினும் சிறிய ஆடியுள் (கண்ணாடியுள்) அடங்கிவிடுவது இல்லையா?

திருக்குறளின் 'பாக்கள்' கடுகு என்றும், அதன் 'பொருள் விரிவு' கடுகைத் துளைத்து ஏழு கடலைப் புகுத்தியது என்றும் இல்பொருள் உவமை வாய்பாட்டால் இடைக்காடர் கூறியதை எண்ணலாமே! இவை, கடல் கடத்துள் அடங்கும் சான்றுகள் அல்லவா! கோடி கோடி கல் தொலைவுக்கு அப்பாலாகிக் கண் சிமிட்டும் விண்மீன்கள் கண்பா(ர்)வையுள் அடங்கிவிடக் காண்கின்ற நாம் 'கடத்துள் கடல்' அடங்குவதை உணர

முடியாதா? அது என்ன செயற்கைக் குடமா? உயிரோ உணர்வோ அற்ற குடமா? உயிருள் உயிராம் குடம்! உணர்வே தானாம் குடம்! அக்குடத்துள் அடங்காதது எது? எப்பெரிதும் அதனுள் அடங்கும்! வானார்ந்த புகழ் எய்தியோர் எத்தனை எத்தனை பேர்! அவர்கள், 'கருவினுள் திருவாய்' அமைந்தவர் தாமே!

## அன்பு உயிர்

அன்புவேறு உயிர்வேறு இல்லை. 'அன்பே உயிர்' என்பது மெய்யுணர்வர் மேதக்க முடிவு.

எலும்பைத் தோலால் போர்த்து வைத்ததா உடல். அவ்வாறானால் கொல்லைப் பகுதியில் தோட்டக்காலில் விளைநிலத்தில் புதுமனையில் நிறுத்தி வைத்த 'பொம்மை' உடலாகி விடுமே!

உயிர் இயக்கம் உடையது!

உயர்ந்து உயர்ந்து மேனிலை எய்தச் செய்வது;

உய்ப்பது உயிர்! உயிரின் அடையாளம் என்ன? இயக்கம்! என்ன இயக்கம்? அறிவு இயக்கம்! ஒளி இயக்கம்! உள்ளொளி இயக்கம்!

ஓரறிவு முதலாய் ஆறாம் அறிவாய் ஓங்கி, அவற்றின் மேலறிவாய்த் திகழ வாய்ந்தது உயிர். ஆன்ம இயலும் மெய்ப் பொருளியலும் தேர்ந்து தெளிந்து வீடு காணச் செய்வது அது.

ஓர் அறிவின் விளக்கம் போதாமல் (மெய்), ஈரறிவாய் (மெய், வாய்), மூவறியாய் (மெய், வாய், மூக்கு), நாலறிவாய் (மெய், வாய், மூக்கு, கண்), ஐயறிவாய் (மெய், வாய், மூக்கு, கண், செவி), ஆறறிவாய் (மெய், வாய், மூக்கு, கண், செவி, மனம்) - மேல் திகழ்வது. அந்நிலையுற்ற பிறப்பு,

**"மறுவில் செய்தி மூவகைக் காலமும்**
**நெறியின் ஆற்றிய அறிவன் தேயம்"**

என்றும்,

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன்".

என்றும் ஆசிரியர் தொல்காப்பியரால் சொல்லப்படும். அவ்வறிவின்ப நிலை, உள்ளொளி பெருகிய, 'உலப்பிலா ஆனந்தநிலை' என்று மணிவாசகரால் சொல்லப்படும்.

ஒள்ளொளி விளக்கினைச் சுற்றித் திரைகள் பல சூழ்ந்து கிடந்து, அறிவு ஆர்வத் தூண்டலால் ஒவ்வொன்றாய்த் திரையை விலக்கி விலக்கி விளக்கொளி காண்பது போன்றது, உயிர் ஒளிர் அறிவாம்!

அறிவை மேல் மேல் வளர்க்க அறிவு தானே தூண்டும். அந்த அறிவு உண்மை அறிவு, கல்வியறிவு, சூழல் அறிவு என மூவகைப் படும். இவற்றின் விளக்க நிலையால் இலங்கறிவு, விளங்கறிவு, வாலறிவு எனச் சொல்லப்படும்.

பொது அறிவினும் ஓங்கிய வாலறிவு குருவன் வழியே அறியப் பெறுவதாம். குரு என்பது ஒளி. உள்ளொளி உடையானும், உள்ளொளி எழச் செய்வானும் குருவன் ஆவன்.

அவன் குருட்டினை நீக்கும் குருவன்; குருட்டினை நீக்காக் குருவனும் உளன். குருவை (உள்ளொளியை) அடைய அ஁து உடையானைத் தானே அணுகி நின்று அவனொடும் அவனாகித்தானே பெறவேண்டும்!

**"அறியாத என்னை அறிவாயும் நீயென் றகம்புறமும்**
**பிறியா தறிவித்த பேரறி வாம்சுத்தப் பேரொளியே"**

- தாயுமானவர் (பாயப்புலி. 30).

என்றார்

"அறிவி லாதவெ னைப்புகுந் தாண்டுகொண் டறிவதை யருளிமேல்
நெறியெ லாம்புல மாக்கிய எந்தையைப் பந்தனை அறுப்பானை"

என்றார் மணிவாசகர் (ஆத்துமசுத்தி; திருச்சதகம்: 32).

## அன்பு அணு

விண்ணும் மண்ணும் நீரும் கடந்ததாம் விரியன்பு, அணுவாய் அணுவுள் அணுவாய் இருத்தல் வியப்பாம். விரிவின் விரிவாம் அன்பு, தன்னியல் மாறாமல் நுண்ணிதின் நுண்ணிதாய் நிற்கவும் வல்லது என்பதாம்.

ஆறடி உயரத்தன் எனினும் அவனிடை அன்பு உண்மை எப்படி வெளிப்படுகிறது? அன்பு முகத்தில் வெளிப்படும்; அகத்தை முகந்து வழங்குவது முகம் தானே! முகத்திலும் பனித்துளியன்ன நீர். இவ்வாறு நுண்ணிதின் வெளிப்படு திறமே,

**"அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர்**
**புன்கணீர் பூசல் தரும்"**

எனத் தோற்றம் தருவதாம்.

அணுவுள் அமைந்த பேரொளி உண்டா?
அணுத்துகள் உராய்வு தானே ஒளிமூலம்!
கல்லாகட்டும்! பாரிய
அண்டம் அணுவுள் அணுச் செறிவே!
நீரும் நெருப்பும் நிலமும் அத்தகைத்தே.
மணிவாசகர் விளக்கம் புரிகிறார்:
"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்னணுப் புரையச்
சிறிய வாகப் பெரியோன்" (திருவண்டப்பகுதி: 1-6)

அணுவுள் அமைந்த பேரொளி, ஆக்கம் செய்வது. அணுவை அழிவுக்குப் பயன்படுத்துவது அறிவியல் அன்று; அழிவியல். ஏனெனில் அறிவின் இலக்கணம்,

சென்ற இடத்தால் செல்லவிடாது;
தீமையில் இருந்து விலக்கும்;
நல்வழியிலே செலுத்தும்;

பிற உயிர்களின் துயரைத் தன்னுயிர்
உற்ற துயராகக் கொள்ளும்.

ஒளிபுக்க இடத்திலே -
பேரொளி புக்க இடத்திலே -
இருளுக்கு இடமேது!

அருட்பேரொளிப் பிளம்பின் கொடைவளமே
எல்லாம்! எல்லாம்!

# அன்பு உரு

இனி அன்பின் உருவைக் காணவேண்டும். அன்பு, பண்பு. அது பருப்பொருள் அன்று; ஆவிப் பொருளும் அன்று; அஃதிருக்கும் பொருள் கொண்டே அதன் இருப்பை உணர்த்துவது! அவ்வாறு உணர்த்த எண்ணற்ற பொருள்கள் உள்ளன.

அன்பு தொடர்புடையாரிடத்துத் தோன்றும் உள்ள நேயம்; தொடர்புடையவற்றின் மேலும் தோன்றும் எனவும் விரித்துக் கொள்ளலாம்.

பெற்றோர்க்கு மட்டுமா பிள்ளைகள் மேல் அன்பு!

ஆவுக்கு அதன் கன்றின் மேல் அன்பு இல்லையா?

அரிமாவுக்கு அதன் பெட்டை குட்டிமேல் அன்பு இல்லையா?

வண்டும் நண்டும் பெண்டு பிள்ளைமேல் கொண்ட

அன்புக் கொள்ளையை அளவிடல் எப்படி?

இனி அடியார் இறைவன் மேல் கொண்ட அன்பும் கூட அளவிடப்படுகிறதே;

இறை அன்பின் ஓருருவாகவே திகழ்ந்த மணிவாசகர் எவரை முன்னே நிறுத்துகிறார்?

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்

என்னப்பன் என்னொப்பில் என்னையுமாட் கொண்டருளி" என்கிறாரே! அவரென்ன அன்பில் எளியரா?

"திருவா சகமிங் கொருகால் ஓதின்

கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்

தொடுமணற் கேணியில் சுரந்துநீர்ப்பாய

மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி

**அன்பர் ஆகுநர்** அன்றி

மன்பதை உலகின் மற்றையர் இலரே"

எனச் சிவப்பிரகாச அடிகளாரால் பாராட்டப்படும் செம்பொருள் வாழ்வர் அல்லரோ!

ஆவின் படம் போல் - அன்றிலின் படம் போல் - அன்னையின் படம் போல் - அடியார் ஒருவர் படம் போல் வரைந்து '**அன்பின் உரு**' என்று காட்டி விடலாமா? உடைமையை உடையதன் வழியாகக் காட்டல் தானே முடிவது!

ஆனால், அவ்வாறு காட்டுதலில் காட்டும் பொருளுக்கு - அன்புக்கு - எக்குறைவும் நேர்ந்து விடக் கூடாதே!

ஆவின் அன்பு அதன் கன்றிடத்து ஒரு கால அளவுக்குக் காட்டப்படுவது தானே!

அன்றில் அன்பு, அவற்றின் இணை என்னும் அளவில் நிற்பது தானே! அன்னையின் அன்பு, கணவன், மக்கள், சுற்றம், சூழல், உற்றார், உறவு என்னும் அளவினது தானே!

**அளவமைந்த அன்பு,**

**"கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளும் களிப்பே**
**காணார்க்கும் கண்டவர்க்கும் கண்ணளிக்கும் கண்ணே**
**வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே**
**மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே**
**நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே**
**நரர்களுக்கும் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே**
**எல்லார்க்கும் பொதுவில்நடம் இடுகின்ற சிவமே"**

என்னும் பொதுமைச் சீர்த்தியை எய்தவல்லனவா? இல்லையே! அதனால் எடுத்துக் காட்டிய ஆ, அன்றில், அன்னை ஆகிய, இவ்வுருவங்களையோ இன்னவை பிறவற்றையோ காட்டினால் முழுதுறும் அன்பு ஓவியம் ஆகிவிடாதே!

ஒன்றன் இயல்பைச் சுருக்கியும் குறுக்கியும் அளவுட் படுத்தியும் காட்டல் குறைவற்றதாகி விடுமா? அவ்வாறானால் குறைவிலா நிறைவு ஒன்றனைக் காட்டுதலே சால்பாம்! செப்பமாம்! அவ்வகையில் திருமூலர் ஒரு வழிகாட்டினார்:

"அன்பும் சிவமும்இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
**அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"**

(திருமந்திரம். 270)

என்பது.

அன்பின் உருவம், அமைந்தது; அடங்கியது; அகந்தண்ணியது; புறம் செவ்வியது; மலையன்ன மாண்பினது; செங்கதிர் அன்ன ஒளியது; அது 'சிவம்' எனும் பரம்பொருள்! ஆதலால், "அன்புருவாம் பரசிவமே" என உறுதி செய்தார் வள்ளலார்.

சிவம் செம்மையின் வடிவம்! அவ்வடிவம், அன்பின் வடிவம்! பரமாம் இறையென எவ்வெச் சமயம் எதனைக் கொண்டாலும் அதன் பெயர் 'செம்பொருள்', 'செம்மை' என்பதில் எத்தடையும் இல்லை. இதன் விளக்கமே - வடிவமே - இலக்கமாம்!

'எல்லே இலக்கம்' என்பது நம் தொல்லோன் உரை!
இலக்கம் - ஒளி; கதிரோன். இலங்குதல் - விளங்குதல்!
இருள் கப்பிக் கிடக்குங்கால் கண் யாது கண்டது?
கதிர் தோன்றியதும் பளிச்சிட்டுத் தோன்றாதவை எவை?

உலக விளக்கின் வடிவாம் இலங்கம் சிவமெனும் செம் பொருளாகத் தமிழர் உணர்வில் தோன்றி அன்பின் உருவம் ஆயது என்க.

அன்பெனும் பிடி, அன்பெனும் குடில், அன்பெனும் வலை, அன்பெனும் கரம், அன்பெனும் கடம், அன்பெனும் உயிர், அன்பெனும் அணு, அன்புரு எனக் கண்டருளிய வள்ளலார்,

அருட்பெருஞ்சோதி வடிவாகிய சிவத்தை,

"மலையாகவும், அரசாகவும், பரம்பொருளாகவும்,
அமுதாகவும், கடலாகவும், அறிவாகவும்
ஒளியாகவும், கண்டு வெளிப்படுத்திய பாடல் வருமாறு:

"அன்பெனும் பிடியுள் அகப்படும் **மலையே**

அன்பெனும் குடில்புகும் **அரசே**

அன்பெனும் வலைக்குட் படுபரம் **பொருளே**

அன்பெனும் கரத்தமர் **அமுதே**

அன்பெனும் கடத்துள் அடங்கிடும் **கடலே**

அன்பெனும் உயிர்ஒளிர் **அறிவே**

அன்பெனும் அணுவுள் ளமைந்தபே **ரொளியே**

அன்புரு வாம்பர **சிவமே.**

அன்பை எண்வகையாய்க் காட்டினார் வள்ளலார்! எண் வகை எட்டு வகை மட்டுமா? எண்ணும் வகையெல்லாம் சுட்டாதா? எண் என்பது எளிமைப் பொருளும் தருமே! எளிமையுள் அருமை இறைமையொடு கூடிய அன்பாம்!

**வாழிய அன்பியல் -**

**இன்பியல் மூலம் அ.'.தாதலால்!**

❖❖❖❖

# பின் இணைப்பு

## திருக்குறளில் அன்புடைமை

இல்வாழ்க்கைத் தொடக்கமே அன்புடைமை மட்டுமன்று, அறத்தின் பொருளின் இன்பின் தொடக்கங்களும் அன்புடைமையே!

அன்பு இல்வாழ்க்கைப் பண்பு என்பதை,

**"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
**பண்பும் பயனும் அது"**

என்பது அது. இல்லறம் துறவறம் இரண்டும் ஒன்றன் மேல் ஒன்றாய் அமைந்த அடித்தளமும் மேல்தளமும் ஆதலால், துறவறத் தொடக்கத்தை, அருளுடைமையில் தொடங்கினார்.

"அருளென்னும் அன்பீன் குழவி" என்ற அளவில் நில்லாமல் பொருள் என்னும் செல்வச் செவிலி (வளமிக்க வளர்ப்புத் தாய்) என்றும் இணைத்தார்.

அன்பொடு வாராப் பொருள் பொருளன்று என்று வலியுறுத்துகிறார். (1009, 755). அதிலும்,

**"அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
**புல்லார் புரள விடல்"**

என்பது பெரிதும் நோக்கத் தக்கது.

களவு என்பதே அன்பின் வித்தும் முளையும்; கற்பு என்பது அதன் வளர்வும் விளைவும் தானே!

ஆதலால் அன்புடைமையின் ஆட்சியே, அதன் விளைவாம். அருள், பொருள், அறம், அறிவு, ஒழுக்கம், ஒப்புரவு, கொடை, புகழ், பேரா இயற்கை, இறைமை யாவும் "அன்பே! அன்பே! என்பவை தாமே!

அன்பை அடைக்க ஓர் அடைப்பு இல்லை!
அன்புடையார் தம்உடலாலும் பிறர்க்குரியர்!
அன்பு நிற்கும் உடலே உயிரியக்க உடல்.
அன்பே ஆர்வத்தையும் நட்பையும் தரும்.
இன்ப உறையுளாக இருப்பது அன்பே!

அன்பு அறத்திற்கு மட்டுமன்று வீறு, வெற்றி முதலியவற்றுக்கும் சார்புடையது.

புழு பூச்சிகளை வெயில் வாட்டுவது போல அன்பிலா உயிரை அறம் வாட்டும். அன்பிலார் வாழ்வு பட்டமரம் போன்றது.

அகத்து உறுப்பாம் உயிர்வாழ்வு அன்பு இல்லையானால் மற்றைப் புற உறுப்புகளால் என்ன பயன்? அன்புக்காகவே உயிர்வாழ்வு அமைவாகி உள்ளது.

- இவை அன்புடைமை அதிகாரப் பொருட்பிழிவு.

❖❖❖❖



அரசு மாமணி மர். புரவியப்பர் இணையர்